**செ.வெ. எண்: 102** **நாள் : 01.02.2011.**

## மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களின் ஆய்வு கூட்ட நடவடிக்கைகள்

01.02.2011 அன்று மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர், திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களால் கலைஞர் காப்பீடு திட்ட முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் திரு.வி.கே.சுப்புராஜ், இ.ஆ.ப., சுகாதாரத் துறை முதன்மை செயலாளர், திரு.எஸ்.விஜயகுமார்,இ.ஆ.ப., சுகாதார துறை சிறப்பு செயலாளர் மற்றும் திட்ட இயக்குநர், M/s. ஸ்டார் நிறுவன நிர்வாக இயக்குநர், துணைத்தலைவர் மற்றும் அலுவலர்கள், ஈகிள் சாப்ட்வேர் நிறுவன அதிகாரிகள், மருத்துவக் கல்வி துணை இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை இயக்குநர் & மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் (DMS) மற்றும் கலைஞர் காப்பீட்டுத் திட்ட அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதுவரை (31.01.2011) 2,69,453 நபர்களுக்கு ரூ.700,78,98,000/– செலவில் உயிர் காக்கும் உயர் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட வாரியாக அடையாள அட்டைகள் வழங்கப்பட்ட விவரங்கள் ஆய்வு செய்யப்பட்டு எஞ்சிய அடையாள அட்டைகளை பிப்ரவரி 15–ம் தேதிக்குள் வழங்கி முடித்திட ஆணையிடப்பட்டது. மருத்துவ சிகிச்சை குறித்து மாவட்ட வாரியாக, மற்றும் நோய் வாரியாக ஆய்வு செய்யப்பட்டது. அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளின் செயல்பாடுகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

இதுவரை 55,965 நபர்களுக்கு எலும்பு முறிவு அறுவை சிகிச்சையும், 47,571 நபர்களுக்கு புற்றுநோய் சிகிச்சையும், 23,499 நபர்களுக்கு இருதய அறுவை சிகிச்சையும், 19,667 பெண்களுக்கு கர்ப்பபை நீக்குதல் அறுவை சிகிச்சையும், 19,212 நபர்களுக்கு கண் அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டுள்ளது. சுகாதாரத் துறை இயக்குநர் அவர்கள் அனைத்து மாவட்டகளிலும் தனியார் மருத்துவமனைகளின் துணையோடு மருத்துவ முகாம்கள் நடத்த வேண்டும் என மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

தஞ்சாவூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் முன்மாதிரியாக தீவிர சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட வேண்டும். இதைப் பின்பற்றி மற்ற மாவட்டங்களிலும் முகாம்கள் நடத்தி அவற்றில் கண்டறியப்படும் நோயாளிகளுக்கு கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் உரிய சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

இதுவரை Cochlear Implant கமிட்டி மூலம் 47 குழந்தைகளுக்கு பரிந்துரை செய்யப்பட்டு, 11 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.**